# திருவருகைக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

கதிரவன் கண் பட்டதும் காணாமல் போகும் பனித்துளி போல, இறைவனின் அன்பு நம் மீது பொழியப்பட்டு, கவலைகள் கரைந்து போகும் இத்திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடன் வரவேற்கிறோம்.

இங்கு ஏற்றப்பட்டிருக்கும் இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தி, நம்மை மகிழ்ந்திருங்கள், இது மகிழ்ச்சியின் நாள் என்று மகிழ்ச்சி ஒளியை நம்முள் ஏற்றுகின்றது.

“மகிழ்ச்சி என்பது மறைந்து போனால்

வாழ்வு சுமக்கமுடியாத சுமையாகிவிடும்.”

பரந்து விரிந்த உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் அனுபவித்து மகிழ்ந்திருங்கள் என்றே இறைவன் படைத்தார்.

“மகிழ்ச்சி என்பது பணத்தால் வருவது கிடையாது

நாம் மனதால் உணர வேண்டியது.”

எனவே மனதின் மகிழ்ச்சியை மனிதர்களோடு பகிர்ந்து கொண்டு பன்மடங்காக்குவோம்.

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் மத்தியில், மக்களுக்கு புத்துயிர் அளித்ததை செப்பனியா இறைவாக்கினர் கூறுகிறார். “இஸ்ரேலின் ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்’ இனி நீ எந்தத் தீங்கிற்கும் அஞ்ச மாட்டாய்” என்று இறை அன்பை உணர்ந்து மகிழவும், அஞ்சாது, இறைப்பாதையில் நடக்கவும் கூறுகிறார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், “ஆண்டவரோடு இணைந்து மகிழுங்கள்” என்று நம் சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்கிறது பிலிப்பியருக்கு எழுதப்பட்ட வார்த்தைகள். “எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்” என்றும் “நம் வாழ்வின் சுமைகளை சுகங்களாக்குகிறவர் நம்மோடு இருக்கிறார்” என்பதை உணர்ந்து விசுவசிக்கும் போது எச்சூழலிலும் மகிழ்ச்சியும் மன நிறைவும் வந்தடையும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறை இயேசுவின் பிறப்பை வருகையும் திருத்தூதர் யோவான் குறிப்பிடுவதை காண்கின்றோம். பகிர்ந்து வாழுங்கள் என்ற உன்னதமான கருத்தைத் தெரிவிக்கிறார் திருமுழுக்கு யோவான்.

“பெற்றுக்கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை” என்கிறது திருத்தூதர் பணிகள் நூலின் வார்த்தைகள்.

பிறரை அழித்து, ஆதாயம் தேடும் மனிதர்கள் மத்தியில் வாழும் நாம் சேற்றில் தோன்றிய செந்தாமரை போல, இந்த உலகத்தில் இறைவனின் மக்கள் நாம் என்பதை நம் பகிரும் குணத்தின் மூலம் பிறர் அறியச் செய்வோம்.

"வறுமையிலும் தன்னிடம் உள்ளதை

பிறரோடு பகிர்தல் என்பது உன்னதமானது."

இருகரம் நீட்டி இறைவனை வேண்டுவதிலும், ஒரு கரம் நீட்டி எளியவனுக்கு உதவுவது மிகச் சிறந்தது. வாழ்வில் பொருட்செல்வத்தை, நம் நேரத்தை, நம் அன்பை பிறரோடு பகிர்ந்து கொள்ளும்போது மகிழ்ச்சி மனங்களில் நீங்காது நிறைந்திருக்கும். இச்சிந்தனைகளை மனதில் தாங்கி, இப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நல் மேய்ப்பரே எம் இறைவா!

திருச்சபையின் நற்செய்திப் பணியை ஆற்றுவதற்கு நீர் தேர்ந்துகொண்ட எம் திருச்சபைத் தலைவர்கள், பணியாளர்கள், இறைப்பணியோடு பிறரன்புப் பணியிலும் தங்களை ஈடுபடுத்தி மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பகிர்ந்து வாழுங்கள் என்று அழைத்தவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், ஆட்சியாளர்கள், நாட்டை வளப்படுத்தும் திட்டங்களையும் பொருளாதாரத்தையும் அனைவருக்கும் சரியாக பகிர்ந்தளித்து, நாட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பிறரன்பு பேணுங்கள் என்றவரே எம் இறைவா!

உமது நற்செய்தியை எங்கள் வாழ்வாலும், செயல்களாலும் பகிர்ந்தளித்து வாழவும், உடைமைகளையும் உறவுகளையும் இழந்து தவிக்கும் மக்களை கண்ணோக்கி, அவர்கள் மகிழ்வான வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மகிழ்ச்சியின் வடிவே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசிர்வதித்து, விவசாயம் சிறக்கவும், குடும்பங்களில் மகிழ்ச்சி, மன நிறைவு பெருகவும், உள்ளத்து விருப்பங்கள் இறைவனால் நிறைவேற்றப்படவும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com